[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2005 மார்ச் 29

உறுதிப்படுத்த அனுமதி அளிக்கப்படவுள்ளது. கி.மீ. 0/0 முதல் 12/0, இப்பகுதி, காவேரிப்பட்டினம் தொகுதியைச் சார்ந்த ஒரு வழிப் பாதையாகவும், இப்பகுதி கடந்த 10 ஆண்டுகளாக சரிவர அதனுடைய தார் நொடிகள் சீராகப் போடப்பட்டு போக்குவரத்துக்கு ஏற்றதாக அந்தச் சாலை உள்ளது என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றேன். கி.மீ. 29 முதல் 39/8, இப்பகுதி ஓசூர் தொகுதியைச் சார்ந்த இரு வழிப் பாதையாகும். தற்போது அந்தச் சாலை நல்ல நிலையில் உள்ளது என்பதனையும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே.வி. முரளிதரன்.

திரு. கே.வி. முரளிதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சரின் விளக்கத்திற்கு நன்றி. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவிக்கிறபோது, 2004–2005–க்கு ரூ.10 கோடி நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த நிதி எந்தெந்தச் சாலைகளுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11–30

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தளி தொகுதியில் மட்டும் 2005–2006 நிதியாண்டில் ரூ.354 இலட்சத்திற்கு மாநிலச் சாலையையும், ரூ.553 இலட்சத்திற்கு மாவட்ட முக்கியச் சாலையையும், ரூ.728 இலட்சத்திற்கு மாவட்ட இதர சாலைகளையும் மேம்படுத்த மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களால் அனுமதி வழங்கப்பட உள்ளது என்பதையும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த கவன ஈர்ப்பு பின்னர் எடுத்துக்கொள்ளப்படும்.

7. அறிக்கைகள் அளித்தல்

(அ) அரசு உறுதிமொழிக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகளை அளித்தல், அரசு உறுதிமொழிக் குழுவின் அறிக்கை அளித்தல், திரு. லா. சந்தானம்.

திரு. லா. சந்தானம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2003–2005 ஆம் ஆண்டிற்கான அரசு உறுதிமொழிக் குழுவின் முப்பத்து ஆறாவது அறிக்கையைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.